# கொழும்புப் பல்கலைக்கழகம் - இலங்கை

## கலைப்பீடம்

## நான்காம் வருடக் கலைமாணிப் பரீட்சை – பருவம் II – 2016/2017

## PSC 4276 – உலக அரசியலில் சமூக இயக்கங்கள்

## நேரம் : இரண்டு (02) மணித்தியாலங்கள்

ஏதாவது **மூன்று (03)** வினாக்களுக்கு மட்டும் விடையளிக்குக.
ஒவ்வொரு விடையும் ஆகக்கூடியதாக **இருபது (20)** புள்ளிகளைக் கொண்டிருக்கும்.

---

1. 'அனைத்து வகையிலுமான சமூக இயக்கங்களும் கூட்டுச் செயற்பாடுகளே. ஆனால் அனைத்து கூட்டுச் செயற்பாடுகளும் சமூக இயக்கங்கள் அல்ல'. இக் கூற்றை விளக்குக.

2. புதிய சமூக இயக்கங்களின் 'கருத்தியல் ரீதியான பரமாணம்' (ideological paradigm) மற்றும் 'பெறுமான சார்புநிலைகள்' (value orientations) என்பன தொடர்பில் பரீட்சிக்குக.

3. சிவில் சமூகத்தின் மார்க்சிய மற்றும் பின்-மார்க்சிய எண்ணக்கருக்களுக்கு இடையிலான வேறுபாட்டினை நுணுக்கமாகப் பகுப்பாய்வு செய்க.

4. சுதந்திரத்திற்கு பின்னரான இந்தியாவில், சூழலியல் இயக்கங்கள், அரசினது பொருளாதார அபிவிருத்திக் கொள்கைகள் மற்றும் சூழலியல் கரிசனைக்கிடையிலான மோதலை எவ்வாறு பிரதிபலிக்கின்றன? விளக்குக.

5. ஈரானிய புரட்சிக்கு முன்னரும், பின்னருமான பெண்களின் இயக்கங்களின் அடைவுகள் மற்றும் தோல்விகள் பற்றி கலந்துரையாடுக.

6. இலங்கையில் கடந்த இரண்டு தசாப்த காலப்பகுதியில் சர்வதேச மனித உரிமைகள் அமைப்புக்களின் வகிபாகம் மீதான சமூக விவாதத்தைப் பகுப்பாய்வு செய்க.

7. பின்வருவனவற்றில் ஏதேனும் **இரண்டிற்கு (02)** குறிப்புகள் எழுதுக.

   I. சர்வதேச பொதுமன்னிப்புச் சபை
   II. இலங்கையில் பெண்களின் இயக்கங்கள்
   III. அரச-சார்பற்ற ஒழுங்கமைப்புகள்
   IV. சமூக இயக்கங்களின் வாழ்க்கை வட்டம்
   V. சமூக இயக்கங்கள் தொடர்பான கோட்பாட்டு ரீதியான அணுகுமுறைகள்

************************